செய்திவெளியீடு நாள் : **11.1.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் விரைவில் அடிக்கல் நாட்டி, பணிகளை துவக்கி வைக்கப்படவுள்ள பிராட்வே பேருந்து நிலையம் ரூ.800 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள "குறளகத்துடன் இணைந்த பல்நோக்கு போக்குவரத்து வசதி வளாகம்" பெருந்திட்ட முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

.

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** திருக்கரங்களால் பிராட்வே பேருந்து நிலையத்தை ரூ.800 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள **"குறளகத்துடன் இணைந்த பல்நோக்கு போக்குவரத்து வசதி வளாகம்"** பெருந்திட்ட பணிகளை விரைவில் துவக்கி வைக்கப்படுவதை முன்னிட்டு, அதன் முன்னேற்பாடு பணிகளை இன்று (11.01.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார். இதற்கு முன்னர் **மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, **ஜவகர் நகர் நூலகத்தில்** புதிதாக கட்டப்பட்டு வரும் **"முதல்வர் படைப்பகம்"** பணிகளை துரிதபடுத்தும் வகையில் நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர்/கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., இணை ஆணையர் (பணிகள்) திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., போக்குவரத்து காவல் இணை ஆணையர் (வடக்கு) திருமதி.திஷா மீட்டல் இ.கா.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவன தலைமை செயல் அலுவலர் திருமதி.ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் திரு.டி.அர்ஜுனன், ஐ.ஆர்.இ.எஸ்., சென்னை குடிநீர் வாரிய தலைமை பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் திரு.ஏ.எஸ்.முருகன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™